**வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை**
**செயலாளர், கடலூர் விற்பனைக்குழு, கடலூர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை: திரு.மு.இரவி.,**

செ.மு.ஆ.எண் ஆ1/1446/2019 நாள்: 29.09.2021

பொருள்: பணியமைப்பு – கடலூர் விற்பனைக்குழு, கடலூர் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தொகுதி – IV – பணியிடங்கள் – 2018–19 மற்றும் 2019–2020ஆம் ஆண்டு காலிப் பணியிடங்களுக்கு தேர்வாணையம் மூலம் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டவருக்கு –பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: 1) அரசாணை (நிலை) எண். 978 வேளாண்மை (வே.வி–III) துறை நாள்: 23.05.1985
2) செயலாளர், தமிழ்நாடு அரசு தேர்வாணையம், சென்னை–03 அவர்களின் கடித எண் 2339/PSD-I/2020 நாள்: 28.05.2020.
3) இவ்வலுவலக செ.மு.ஆணை எண் ஆ1/1446/2019 நாள்: 03.08.2020.

--------

**ஆணை**

தமிழ்நாடு அரசு தேர்வாணையம் தொகுதி – IV இல் இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு 2018–2019 மற்றும் 2019–2020ஆம் ஆண்டில் நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்து கடலூர் விற்பனைக்குழுவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 3இல் காணும் ஆணையின்படி இளநிலை உதவியாளராக பணிப்புரியும் கீழ்க்காணும் பணியாளர்களுக்கு கலம் (4)இல் குறிப்பிட்டுள்ளவாறு இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர் / பதவி / பணிப்புரியும் இடம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யும் நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | திரு.பு.சதீஷ்குமார், இளநிலை உதவியாளர், தலைமை அலுவலகம், கடலூர் விற்பனைக்குழு, கடலூர். | 05.08.2020 முற்பகல் | 05.08.2020 முற்பகல் |
| 2. | திரு.வி.பிரபாகரன், இளநிலை உதவியாளர், ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், பண்ருட்டி. | 05.08.2020 முற்பகல் | 05.08.2020 முற்பகல் |

மேலும், இப்பணியாளர்கள் இளநிலை உதவியாளர் பதவியில் கலம் (4) இல் உள்ளவாறு பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்றாண்டுகள் தொடர்ப்பணியில், இரண்டாண்டு காலத்திற்கு தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது.

மேற்படி நபர்கள் தங்களது இரண்டாண்டு தகுதிகாண் பருவக்காலத்திற்குள் துறைத்தேர்வு மற்றும் அலுவலக நடைமுறை நூல் மற்றும் தேர்ச்சி பெற நிர்ணயிக்கப்பட்டுள்ள தேர்வுகளில் குறிப்பிட்ட காலத்தில் தேர்ச்சி பெறவேண்டுமென அறிவிக்கப்படுகிறது.

செயலாளர்,
கடலூர் விற்பனைக்குழு,
கடலூர்.

பெறுதல்

1. திரு.பு.சதீஷ்குமார், இளநிலை உதவியாளர், தலைமை அலுவலகம், கடலூர் விற்பனைக்குழு, கடலூர்.
2. திரு.வி.பிரபாகரன், இளநிலை உதவியாளர், ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், பண்ருட்டி.

நகல்:

1. விற்பனைக்கூட கண்காணிப்பாளர், ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், பண்ருட்டி.
2. அ1,அ2, பட்டியல் மற்றும் கோப்பு.
3. பணிப்பதிவேடு மற்றும் இருப்பு கோப்பு.